இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 6
இறுதிப்பரீட்சை 2006/2007
சட்டவியல் - LWU 3321/4311/4321
காலம் : 3 மணித்தியாலங்கள்.

திகதி: 27.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "அரசொன்றினது அல்லது ஆட்களை கொண்ட ஏதேனும் சபையொன்றிற்கு இயைபாகும் சட்டமானது அந்த அரசு அல்லது அமைப்பின் சட்ட நிருவனமான நீதிமன்றங்களினால் சட்ட உரிமைகள் மற்றும் கடமைகள் எவையென்பதை தீர்மானிக்க பயன்படுத்தப்படுகின்ற விதிகளின் தொகுப்பாகும். …நியதிச்சட்டங்களிலுள்ள இறந்த சொற்களுக்கு நீதிமன்றங்கள் உயிர் கொடுக்கின்றன".

   மேலே குறிப்பிட்ட கருத்து நோக்குகளில் இருக்கின்ற சட்டவியல்சார் கொள்கையின் தத்துவசார் அடிப்படைகளை விளக்குக. அத்துடன் இலங்கை சட்டமுறைமையின் இயல்பை வரைவிலக்கணப்படுத்தி இந்த கொள்கையின் செயற்பாட்டு ரீதியான பயன்பாட்டை ஆராய்க.

2. "சட்டத்தின் அதிகாரம் மற்றும் நோக்கம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு தமது கருத்துக்களை சமூக ஒப்பந்தம் ஒன்றின் ஊடாக கண்ட இயற்கை சட்ட சிந்தனையாளர்கள் சட்டத்தை ஆக்குவதற்கான அரசாங்கத்தின் உரிமைக்குரிய மட்டுப்பாடுகளை மட்டுமன்றி ஆயின் குறிப்பாக அத்தகைய மட்டுப்பாடுகள் கவனத்தில் எடுக்காத சந்தர்ப்பங்களில் சட்டத்துடன் இணைந்து செல்கின்ற கீழ் படிவதற்கான கடப்பாட்டின் விளைவுகள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்".

   உமது விடையில் அரசாங்கங்கள் தமது சட்டமாக்கும் உரிமைக்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பங்களுக்கான எடுத்துகாட்டுக்களை விளக்குவதுடன் அத்தகைய சட்ட உரிமைகளை மீறி செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் சட்டங்களுக்கு கீழ் படியவேண்டிய கடப்பாடுகள் எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை விளக்கி இக் கூற்றை கருத்துரைக்க.

3. (அ) "வினைத்திறன் மிக்க கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ள இந்த உறுப்புரைகளை அவதானிக்கும் போது தெரியவருவதாவது, ஒரே நாட்டின் ஆட்புல எல்லைக்குள் ஒரே நாட்டினது இறைமை மக்களிடம் இணைந்தே இருக்கிறது என்ற அமைப்பிலான பாரம்பரிய குடியரசு என்ற கருத்தேற்பை அடிப்படையாக கொண்டு எமது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதாகும். மக்களுக்காகவும் அவர்கள் அரசாங்கம் மீது வைத்துள்ள நம்பிக்கை என்ற வகையிலும் அரசாங்கத்தின் குறிப்பிடப்பட்ட துறைகளால் பிரயோகிக்கப்படுகின்ற சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை அதிகாரகங்கள் என்பவற்றை இறைமை உள்ளடக்குகிறது. மக்களிடம் இருந்து பெறப்படுகின்ற இறைமையை பிரயோகிக்கின்ற நிறைவேற்று துறை சட்டவாக்கம், நீதித்துறை ஆகிய அரசாங்கத்தின் மூன்று நிறுவனங்களுக்கும் இடையில் செயற்பாட்டு ரீதியான வேறாக்கம் ஒன்று உள்ளது. அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மிஞ்சி அரசாங்கத்தின் நிறுவனங்கள் முழுமையான அதிகாரத்தை பிரயோகிக்க முடியாது. மேலும் அவை தமது அதிகாரங்களை அரசியலமைப்பிலும் அரசியலமைப்பில் இருந்து ஆக்கப்பட்ட எழுதப்பட்ட சட்டங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கிறது". -

per the Supreme court of Sri Lanka in the case of Nallaratnam Singarasa VS. The Attorney General (Decided on 15.09.2006)

ஒஸ்ரின்னுடைய இறைமை கோட்பாட்டுடன் மேலே குறிப்பிடப்பட்ட தீர்ப்பு எந்தளவுக்கு உடன்படுகிறது?.

(15 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றில் ஒஸ்ரின் என்பவரால் வலைவிலக்கணப் படுத்தப்பட்ட வகையில் 'புலனறிவாத சட்டம்' என்ற பதத்திற்குள் உள்ளடக்கப்பட கூடியன எவை என்பதை விளக்குக.

(i) விடுதியில் தங்கியிருக்கின்ற காலப்பகுதியில் கல்வியுடன் தொடர்பு பட்ட விடயங்களில் மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி வழங்குவதில் இருந்து தவிர்க்கப்படல் வேண்டும் என திறந்த பல்கலைக்கழக விடுதி உப பொறுப்பாளரால் வழங்கப்பட்ட கட்டளை

(5 புள்ளிகள்)

(ii) தாய்மை அடைந்த பெண் ஒருவர் முன்னிலையில் உலகில் எந்த ஒரு இடத்திலும் புகைபிடித்தல் தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றம் என X அரசினுடைய ஆட்சியாளரால் வழங்கப்படுகின்ற ஒரு கட்டளை

(5 புள்ளிகள்)

4. சட்டமாக்கும் செயற்பாடுகளில் வரலாற்றுசார் அபிவிருத்தியின் விடயங்களை பின்பற்ற வேண்டிய முக்கியத்துவம் பற்றி வரலாற்று சார் கொள்கைவாதிகள் குறித்துக்காட்டுகின்றனர். அவர்ளுடைய நோக்கில் ஏதேனும் நாட்டினுடைய மக்களின் வளர்ச்சியுடன் சட்டம் அபிவிருத்தி அடைவதோடு மக்களுடைய சக்திக்கு அமைய சட்டம் வலுப்பெறுகிறது இறுதியில் நாடு தமது தேசியத்தை இழக்கின்ற அதே வகையில் சட்டம் இறந்து விடுகின்றது. இந்த வாதத்திற்கு அமைய வழக்காறு சட்டத்தின் அதிமேலாதிக்கம் செலுத்தும் ஒரு தோற்றுவாய் என கருதப்படுகிறது. சமூகம் ஒன்றின் நடைமுறைகள் மற்றும் கூட்டான பழக்க வழக்கங்கள் வழக்காறு என்ற அம்சத்திற்குள் வருவதோடு அவை மக்களை பிணிக்கும் நியமங்களாக வருகிறது. இவ்வகையில் வழக்காறு சட்டத்திற்கு முன்னிலை வகிப்பது மட்டுமன்றி சட்டவாக்கத்தை விட மேலோங்கின்றது.

ஆராய்க.

5. சட்டவியலின் சமூகவியல் சார் கொள்கையின் வளர்ச்சியை கண்டறிந்து அதன் மீது குறிப்பொன்றை எழுதுக.

6. "ஸ்கன்டினேவிய கொள்கை வாதிகளின் அடிப்படை தத்துவத்தின் படி, 'வலிதான தன்மை' மற்றும் 'கடப்பாடு' ஆகிய சட்ட கருத்தேற்புகளுக்கு புறவய மெய்யியல் தன்மை இல்லை என்பதோடு அவற்றினுடைய யதார்த்த விளைவுகள் சமூகத்திலுள்ள பல்வேறு செயற்பாடுகள் மற்றும் மொழி பயன்பாடு என்பவற்றை பெற்றுத்தரக் கூடிய உளவியல்சார் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பதில் அளிப்புகளில் இருந்து பெறப்பட்டவையாகும். இவ்வகையில் பார்க்கின்ற போது ஒப்பந்தம் சார் கடப்பாட்டை உருவாக்கும் அல்லது அவ்வாறு இல்லை எனின் சட்ட உரிமை ஒன்றை அங்கீகரிக்கும் விதி முறையான நடவடிக்கைகளுக்கூடாக பெற்றுக்கொள்ளப்படுக்கின்ற உளவியல்சார் அடிப்படையிலான பதில் அளிப்புகளாக கருதப்படுகின்றன. அத்துடன் இந்த பதில் அளிப்புகள் மேலே கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உடன் அடுத்த நடத்தைக்கு 'கட்டுப்பட' வேண்டும் என்ற விடயத்தை தெளிவாக்குகிறது".

[H. McCoubrey & N.D White, :TEXTBOOK ON JURISPRUDENCE" , Second edition (1996)..p.168.]

மேலே குறிப்பிடப்பட்ட பந்தியில் வெளிப்படுத்தப்பட்ட கருத்தின் உருவாக்கத்திற்கு ஸ்கன்டினேரிய மெய்யியல் வாத கொள்கை வாதிகளின் பல்வேறுபட்ட கருத்துக்கள் எவ்வாறு பங்களிப்பு செய்துள்ளது என்பதை விளக்குக.

7. தற்போதைய தப்ரபானியாவின் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் கீழ், அரசியல் அமைப்பில் மாற்றம் ஒன்றை கொண்டு வருவதற்கு பாராளுமன்ற மொத்த உறுப்பாண்மையில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அனுமதி தேவைபடுத்தப்பட்டுள்ளது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில், ஜனநாயக கட்சி, தப்ரபானியா மக்களிடம் இருந்து தற்போதைய அரசியலமைப்பை சமஷ்டி அம்சங்களை கொண்ட ஒன்றாக மாற்றுவதற்கான ஒரு ஆணையை கோரியது. ஜனநாயக கட்சி தேர்தலில் வெற்றி பெற்றிருந்த போதிலும் தேர்தலில் வாக்களித்த மொத்த எண்ணிக்கையில் 45% வாக்குகளையே பெற்றது. இதன் விளைவாக இக்கட்சி பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை ஒன்றையே அனுபவித்தது. சும டி அரசியலமைப்பை எதிர்க்கின்ற பலம் பொருந்திய. எதிர்கட்சியான தேசியக்கட்சி, தேர்தலில் 35% வாக்குகளை பெற்றுக்கொண்டது. அரசியலமைப்பு மாற்றம் ஒன்றை கொண்டுவர பாராளுமன்றத்தில் தேவையான பெரும்பான்மையை பெற தவறியமை மட்டுமன்றி தப்ரபானியவுக்கான புதிய சமஷ்டி அரசியலமைப்பு ஒன்று உருவாக்கும் நோக்கத்திற்காக ஜனநாயக கட்சி அரசியலமைப்பு சபை ஒன்றை உருவாக்கியது. தப்ரபானிய மக்கள் அண்மையில் முடிவடைந்த தேர்தலில், ஜனநாயக கட்சி சமஷ்டி அரசியலமைப்பை ஒன்றை அறிமுகப்படுத்த ஆணை வழங்கியிருக்கிறார்கள். என்ற அடிப்படையில் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஆதரவளித்தவர்கள் அரசியலமைப்பு சபையுடைய தீர்மானம் வலிதானது என வாதிட்டனர். அதே வேளை தற்போதைய அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளின் கீழ் எதிர்கட்சியான தேசிய கட்சி, தப்ரபானிய உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வை நியாயாதிக்கத்தை பயன்படுத்தி, ஜனநாயக கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகளின் சட்டபூர்வமான தன்மை தொடர்பில் கட்டளை ஒன்றை வழங்குமாறு நீதிமன்றத்தை வேண்டியது.

அரசியலமைப்பு சபையினுடைய நடவடிக்கைகளுக்கு தற்போதைய அரசயலமைப்பின் கீழ் சட்டபூர்வமான அந்தஸ்து ஒன்று இல்லை எனக்கூறி தப்ரபானிய உயர் நீதிமன்றம் எதிர்கட்சியான தேசிய கட்சி சார்பாக தனது தீர்மானத்தை வழங்கியது. ஜனநாயக கட்சி உயர்நீதிமன்ற தீர்ப்பை புறக்கணித்து அரசியலமைப்பு சபையுடன் தொடர்ந்து பணியாற்றியது. தற்போதைய அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை தவிர்த்து புதிய அரசியல் அமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஜனநாயக கட்சி தற்போது தயாராக உள்ளது.

சட்டவலிதான தன்மை தொடர்பான கெல்சன்னுடைய கொள்கையுடன் தொடர்புறுத்தி தப்ரபானியாவுக்கான புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்த ஜனநாயக கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாதையுடைய சட்டவியல்சார் விளைவுகளை ஆராய்க.

8. சட்டமானது, ஆட்சியாளர் தமது அதிகாரங்களின் கீழ் கட்டுப்படுத்தும். அதிகாரத்தையும் அதனை எதிர்க்கும் குழுக்கள் மீது ஒடுக்குதலை மேற்கொள்ள வழி செய்யும் வகுப்பு மேலாதிக்கம் கொண்ட கருவி என்ற வகையில் விளக்கும் கோட்பாட்டினுடைய பலம் மற்றும் பலவீனங்களை இலங்கை சட்டமுறையில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

(பதிப்புரிமைபெற்றது)